மின்னிதழ்
# தேசியம்
THESIYAM தேசியம்
www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 102 | 12.07.2023 (புதன்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 9 | ஊக்குவிப்பு : ரூ.30.00




பக்கம் 4

## நீதித்துறை சுதந்திரமாக செயற்படும் வகையில் நடந்துகொள்ள வேண்டும்..! சட்டத்தரணிகள் வேண்டுகோள்

பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது சிறப்புரிமையை பயன்படுத்தி சட்டத்துறைக்கும், நீதித்துறைக்கும் சவாலை ஏற்படுத்தும் விதமாக நீதிபதிகளை அச்சுறுத்தும் வகையிலான பேச்சுக்கள் இந் நாட்டில் நீதித்துறைக்குள்ள பெரிய சவால் என சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர். பௌத்த மரபுரிமைகளை பாதுகாப்பதற்கு சிங்கள மக்கள் ஒன்றிணைய வேண்டும் என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ள கருத்திற்கு வடக்கு மாகாண சட்டத்தரணிகள் கண்டித்து கவனயீர்ப்பினை வெளிக்கொண்டு வந்துள்ளார்கள். கவனயீர்ப்பின் பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளனர். தொடர்ந்தும்

## இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட 33வது மனித புதைகுழி!

### நாடு கடந்த தமிமீழ அரசாங்கத்தால் ஐ.நாவுக்கு பறந்த அவசர கடிதம்!!

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் வொல்கர் துர்க்,(Mr. Volker Turk) ஐக்கிய நாடுகளின் வலிந்து காணமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சிறப்பு விசாரணை ஆணையாளர் அல்பான் அலென்கஸ்றோ (Mr. Juan Pablo Alban Alencastro) ஆகியோருக்கு கடிதங்களை தனித்தனியாக அனுப்பியுள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், முல்லைத்தீவில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனிதப் புதைகுழி அகழ்வுக்கு பொறுப்பெடுக்குமாறும் அதற்கு அங்கு விஜயம் செய்து கையகப்படுத்துமாறும் அழைப்பு விடுத்துள்ளது.

அகழ்வுப்பணி தொடர்ந்தும் நடைபெறுகையில் அதன் நடைமுறையையும், சர்வதேசக் குற்றங்களுக்கான ஆதாரத்தை நேர்மையாகப் பாதுகாக்கும் வகையில் அவசர கோரிக்கைகளாக



பக்கம் 4

## வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ள நாட்டிற்கு குடிசன மதிப்பீடு தேவையா?..!

### கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி..!

நாட்டினை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்ப முடியாத சூழ்நிலையில் குடிசன மதிப்பீடு செய்யப்படுவதற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாது என ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இதனை தெரிவித்துள்ளார்.


நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில், இலங்கையில் முழு குடிசன மதிப்பீடு செய்வதற்காக வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. நாடு முழுவதும் அந்த மதிப்பீட்டை செய்வதற்கு



பக்கம் 4

## யாழ். மண்டைதீவில் இன்று கடற்படைக்கு காணி சுவீகரிப்பு..!

### எதிர்ப்புப் போராட்டத்திற்கு அணிதிரளுமாறு அழைப்பு




பக்கம் 4

யாழ்ப்பாணம் மண்டைதீவு பகுதியில் கடற்படையினருக்காக மேற்கொள்ளப்படவுள்ள காணி சுவீகரிப்பு நடவடிக்கையை தடுப்பதற்கு அனைவரையும் இன்றைய தினம் மண்டைதீவில் அணிதிரளுமாறு யாழ் கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

## சரத் வீரசேகர உங்களுக்கு எதிராகவும் திரும்பலாம்..!

### சகோதர சட்டத்தரணிகளுக்கு சுகாஷ் விடுத்த எச்சரிக்கை



பக்கம் 4

சகோதர சட்டத்தரணிகள் சங்கங்களுக்கும், சகோதர சட்டத்தரணிகளுக்கும் விடுக்கின்ற தாழ்மையான வேண்டுகோள் என்னவென்றால், இந்த இடத்தில் நீங்கள் சுதாகரித்து சரத் வீரசேகரவுக்கு எதிராக குரல் கொடுக்காது இருந்தால் நாளைக்கு இதே சரத் வீரசேகர உங்களுக்கும் எதிராக திரும்பலாம் என சிரேஷ்ட

## நாம் தீண்டத்தகாத தமிழர்களா..!

### தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் கேள்வி



பக்கம் 4

இந்தியாவிடம் 13 திருத்தங்களைக் கேட்கும் தமிழர்கள் ஏன் இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியாவின் நடைமுறையில் உள்ள அரசியலமைப்பைக் கேட்கவில்லை? நாம் தீண்டத்தகாத தமிழர்களா? என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளினால்

# “பாராளுமன்ற சிறப்புரிமையை துஷ்பிரயோகம் செய்யாதே”
## சரத் வீரசேகரவின் கருத்துக்கு எதிராக அணிதிரண்ட சட்டத்தரணிகள்

பாராளுமன்றில் பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தமிழ் நீதிபதிகள் தொடர்பாக தெரிவித்த கருத்தினைக் கண்டித்து முல்லைத்தீவு நீதிமன்றம் முன்பாக வடமாகாண சட்டத்தரணிகள் இணைந்து கண்டண போராட்டம் ஒன்றை செவ்வாய்க்கிழமை (11) காலை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு குருந்தூர் மலை பிரதேசத்தில் கடந்த 04.07.2023 அன்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி. சரவணராஜா களவிஜயத்தை முன்னெடுத்த போது அங்கு அங்கு வருகை தந்த ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கருத்து தெரிவிக்க முற்பட்ட வேளையில் பாராளுமன்ற உறுப்பினர்களுடைய கருத்துக்களை அந்த இடத்தில் தெரிவிப்பதற்கு நீதிபதி அனுமதி மறுத்திருந்தார். இந்நிலையில் அங்கிருந்து வெளியேறிச் சென்ற சரத் வீரசேகர கடந்த 07.07.2023 அன்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது தமிழ் நீதிபதிகள் தொடர்பில் பல்வேறு சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவித்திருந்தார். இவ்வாறான பின்னணியில் தமிழ் நீதிபதிகள் தொடர்பாக வெளியிடப்பட்ட கருத்துக்களுக்கு வலுவான கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் செவ்வாய்க்கிழமை (11) முல் லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தினர் பணி பகிஸ்கரிப்பை மேற்கொண்டதோடு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் முன்பாக மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

இதன் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகளோடு இணைந்து வடக்கினுடைய ஏனைய மாவட்டங்கள் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மட்டக்களப்பு, அம்பாறை உள்ளிட்ட மாவட்டங்களின் சட்டத்தரணிகள் இணைந்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.


முல்லைத்ததீவில்...


கல்முனையில்...


யாழ்ப்பாணத்தில்...


மட்டக்களப்பில்...


மன்னாரில்...

# இன நல்லிணக்கம் இல்லாத மத நல்லிணக்கம் தமிழர்களுக்கு ஆபத்தானது : சபா குகதாஸ்



இன நல்லிணக்கம் ஏற்படாமல் முன் நகர்த்தப்படும் மத நல்லிணக்கம் என்ற பெயரில் கொண்டுவரப்படும் சட்டங்கள் தமிழர்களின் தொன்மைகள் மற்றும் மத அடையாளங்களுக்கு மிக ஆபத்தானவை என்பதை தமிழர் தரப்பு விளங்கிக் கொள்வது அவசியமானது என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவ் அறிக்கையில் மேலும் உள்ளதாவது,

தமிழர்களின் வரலாற்றுத் தொன்மைகளை பௌத்த சிங்கள மயமாக்குவதற்கு சிங்கள கடும் போக்காளர்கள் கையில் எடுக்க இருக்கும் ஆயுதம் மத சுதந்திரத்திற்கு குந்தகம் விளைவிப்பதை தடுப்தற்கான சட்டம்.

சட்டம் என்ற போர்வையில் ஜனநாயகப் போராட்டங்களையும் பாதிக்கப்பட்ட மக்களின் நீதிக்கான எதிர்க் குரல்வளையையும் நிரந்தரமாக அடக்குவதற்கு சிங்கள பேரினவாத அரசாங்கம் தயாராகிறதா?

இன நல்லிணக்கம் இல்லாமல் கொண்டுவரப்படும் மத மற்றும் கலாசார சட்டங்கள் தமிழர்களின் இருப்பை கபளீகரம் செய்வதற்கு என்பதை தமிழர் தரப்பு மறந்து விடக்கூடாது

தற்போது தாயகப்பகுதியில் முன்னெடுக்கப்படும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராக தமிழர் தரப்பினால் மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகளை தடுப்பதே சட்டங்களின் உள் நோக்கம் அத்துடன் மத சுதந்திரம் என்ற பெயரில் தமிழரின் மத கலாசார அடையாளங்களை இல்லாது அழித்தல் ஆட்சியாளரின் பிரதான இலக்கு - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரித்தானியக் கிளை உறுப்பினர்களை சந்தித்த ஜனா எம்.பி..!



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தேசிய அமைப்பாளருமான கோவிந்தன் ஜனா கருணாகரம் தலைமையில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் மற்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகியவற்றின் பிரித்தானியக் கிளையின் நிர்வாக உறுப்பினர்களுடனான கலந்துரையாடலொன்று லன்டன் ஹரோவில் அமைந்துள்ள கலந்துரையாடல் மண்டபம் ஒன்றில் இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலானது இலங்கையில் இருந்து வருகை தந்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும்இதேசிய அமைப்பாளருமான கோவிந்தன் ஜனா கருணாகரம் தலைமை தாங்க தமிழீழ விடுதலை இயக்கம் பிரித்தானிய கிளை சார்பாக சாம், ரூபன் ஆகியோரும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் பிரித்தானிய கிளை சார்பாக சிவபாலன், அல்வின், முகுந்தன் ஆகியோரும்,ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பாக பிரபு, பரமேஸ், சஜீ ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாவால்தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருந்து தமிழரசு கட்சி வெளியேறியபின் மீண்டும, புதிதாக இணைந்த கட்சிகளுடன் உருவான புதிய கூட்டின் இன்றைய கள நிலவரங்கள், கூட்டமைப்பின் யாப்பு, நிர்வாக கட்டமைப்பு, எதிர்கால வேலைத் திட்டங்கள், புலம்பெயர் நாடுகளில் இருக்கும் உறவுகள் ஆற்ற வேண்டிய வேலைத்திட்டங்கள், அடுத்த ஆண்டில் சந்திக்க போகும் தேர்தல்கள், தலைமை காரியாலயம் தொடர்பான விடயங்கள், மற்றும் நிதி தொடர்பான விடயங்கள் என பல விடயங்கள் தெரிவிக்கப்பட்டது.

அவற்றை உள்வாங்கிய உறுப்பினர்கள் அதற்கான தமது கருத்துக்களையும், ஆலொசனைகளையும் தமது கேள்விகளையும் முன் வைத்து பதில்களையும் ஏற்றுக்கொண்டனர்.

இக் கூட்டத்தில் பங்கு பற்றிய உறுப்பினர்களே பிரித்தானியாவின்தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிர்வாக குழு உறுப்பினர்கள் என்றும், ஜனநாயக போராளிகள் கட்சியின் உறுப்பினர்கள் வருகை தராததால் அடுத்த கூட்டத்தில் அவர்களையும் உள் வாங்கி நிர்வாக கட்டமைப்பை தெரிவு செய்தல் என்ற முடிவு எக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு மிகவும் பெறுமதி வாய்ந்த கலந்துரையாடலாக நிறைவேறியது.

# பொதுநலவாய பளு தூக்கல் போட்டியில் வவுனியாவைச் சேர்ந்த மாணவி..! குவியும் பாராட்டுக்கள்..!



பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான பளு தூக்கல் போட்டிக்கு முதல் முறையாக வவுனியா மண்ணில் இருந்து மாணவி ஒருவர் தெரிவாகியுள்ளார்.

2023ம் ஆண்டிற்கான அகில உலக பளு தூக்கல் போட்டிக்காக இலங்கையின் வடமாகாணம் வவுனியாவிலிருந்து 40கிலோ எடை பிரிவில் 16 வயதையொட்டிய வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய மாணவி கோசியா திருமேனன் தெரிவாகி நேற்று தொடக்கம் 16 ஆம் திகதிவரை டெல்லியில் நடைபெறவுள்ள போட்டியில் பங்கேற்க சென்றுள்ளார்.

இவர் வெற்றி பெற்று வடக்கு மாகணத்திற்கு பெருமை சேர்ப்பார் என எதிர்பார்பதோடு ஞானஜீவன் ஆசிரியரின் நெறிப்படுத்தலில் போட்டிக்கு சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

# இந்திய வெளிவிவகார செயலாளர் வினய் மோகன் குவத்ரா : அலி சப்ரியை சந்தித்தார்



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார செயலாளர் வினய் மோகன் குவத்ரா, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை கொழும்பில் செவ்வாய்க்கிழமை (11) சந்தித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயம் தொடர்பாக வெளிவிவகாரச் செயலாளர் வினய் மோகன் குவத்ராவுடன் கலந்துரையாடியதாக அமைச்சர் சப்ரி தெரிவித்தார்.

பரஸ்பர நன்மைக்காக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாக வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்திய வெளிவிவகார செயலாளர் வினய் மோகன் குவத்ரா இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு திங்கட்கிழமை (10) இரவு இலங்கை வந்தடைந்தார்.

இதேவேளை, இந்திய வெளிவிவகார செயலாளர் , இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே உள்ளிட்ட குழுவினர் இலங்கை வெளிவிவகார செயலாளரை சந்தித்து கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது.



தேசியம்
www.thesiyamnews.com THESIYAM

## நீதித்துறை சுதந்திரமாக செய...

அவர்கள் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவால் மேற்கொள்ளப்பட்ட உரை தொடர்பில் நீதிமன்ற அவமதிப்பைக் கருத்திற்கொண்டு நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உட்ட்ட பகுதியில் சட்டத்தரணிகள் பணிப் பகிஸ்கரிப்பை மேற்கொண்டனர்.
இதேபோல், இங்கு இவர்களுக்கு ஆதரவளிக்கு முகமாக மன்னார் மாவடடத்திலிருந்து சில சட்டத்தரணிகளும் கலந்து கொண்டதுடன் மன்னார் மாவட்டத்திலும் பணிக்குச் செல்லாமல் புறக்கணித்துள்ளனர்.
பாராளுமன்றம் சட்டத்தை இயற்றுகின்ற சபையாக காணப்படுகையில் அங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர் தனது சிறப்புரிமையை பயன்படுத்தி சட்டத்துறைக்கும் நீதித்துறைக்கும் சவாலை ஏற்படுத்துமுகமாகவும் நீதிபதிகளை அச்சுறுத்துமுகமாகவும் வகையிலான பேச்சுக்கள் இந் நாட்டில் நீதித்துறைக்குள்ள பெரிய சவாலாகவுள்ளது.
எனவே எதிர்காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுட்பட ஏனையவர்கள் அனைவரும் நீதித்துறையை மதித்து நீதித்துறை சுதந்திரமாக தனது கடமையை மேற்கொள்வதற்குமேற்ற வகையில் நடக்க வேண்டுமென்பதற்காகவே நேற்றைய தினம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## யாழ். மண்டைதீவில் இன்று...

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அந்த செய்திக்குறிப்பில், வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவின், மண்டைதீவு கிழக்கில் ஜே/07 கிராம சேவகர் பிரிவில் உள்ள, 29 பேருக்குச் சொந்தமான 18 ஏக்கருக்கும் அதிகமான தனியார் காணிகளை, வெலிசுமன கடற்படை முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் நோக்கில், இன்று புதன்கிழமை (12) அளவீட்டுப் பணிகளை ஆரம்பிக்கப்போவதாக நில அளவைத் திணைக்களத்தினரால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இவ் அளவீட்டுப் பணிகளை தடுத்து நிறுத்துவதற்காக, மக்கள் பிரதிநிதிகள், காணி உரிமையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் இன்று (12) காலை 7.30 மணியளவில் மண்டைதீவு கிழக்கில் நடைபெறவுள்ள எதிர்ப்புப் போராட்டத்தில் இணைந்து கொள்ளுங்கள் என்றுள்ளது.

## சரத் வீரசேகர உங்களுக்கு...

சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷ் ஒரு கோரிக்கையை முன்வைத்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாங்கள் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு எதிராக போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந் தோம். முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அவர்கள் கடந்த வாரம் இலங்கையினுடைய பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது,
தமிழ் நீதிபதி தன்னை காணியில் இருந்து வெளியேற்ற முடியாது என்று இனவாதத்தை கக்குகின்ற வகையிலும் நீதித்துறையை அவமதிக்கின்ற வகையிலும், அச்சுறுத்துகின்ற வகையிலும் உரை ஒன்றை ஆற்றியிருந்தார்.
அவர் அதிலே உபயோகித்த தமிழ் நீதிபதி என்ற வாசகம் அதே பயங்கரமானது. இதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கு எதிராக நேற்றைய தினம் முல்லைத்தீவிலே மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தோம்.
இந்த இடத்தில் நாங்கள் சகோதர சட்டத்தரணிகள் சங்கங்களுக்கும், சகோதர சட்டத்தரணிகளுக்கும் விடுக்கின்ற தாழ்மையான வேண்டுகோள் என்னவென்றால், இந்த இடத்தில் நீங்கள் சுதாகரித்து சரத் வீரசேகரவுக்கு எதிராக குரல் கொடுக்காது இருந்தால் நாளைக்கு இதே சரத் வீரசேகர உங்களுக்கும் எதிராக திரும்பலாம்.
இன்று தமிழ் நீதிபதி என்று விழித்த சரத் வீரசேகர, சிங்கள நீதிபதி என்றோ, முஸ்லீம் நீதிபதி என்றோ அல்லது கரையோர சிங்கள நீதிபதி என்றோ கூட அச்சுறுத்துவார். ஆகவே சரத் வீரசேகரவின் கருத்துக்களுக்கு எதிராக எதிர்வினை ஆற்றுமாறு நாங்கள் கோரி நிற்கின்றோம் - என்றார்.

## நாம் தீண்டத்தகாத தமிழர்களா..!

2332வது நாளாக நேற்று (11.07.2023) சுழற்சி முறை போராட்டத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.
அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
தமிழ் தாய்மார்களாகிய எமக்கு கூடிய விரைவில் அரசியல் தீர்வு வேண்டும். தமிழர்களின் இறையாண்மை கடந்த காலத்தில் வலிநது காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களை கண்டறிய உதவும், தற்போதைய தமிழர்கள் காணாமல் ஆக்கப்படுவதை தடுத்து நிறுத்தும்.
13வது திருத்தச் சட்டத்தை முன்வைக்கும் இந்த அரசியல் வாதிகள், இலங்கையில் இந்திய பாணி அரசியலமைப்பை நடைமுறைப்படுத்த ஒருபோதும் குரல் கொடுக்காதது ஆச்சரியமாக உள்ளது.
இதற்குக் காரணம், ஒருவேளை அவர்கள் இந்திய அரசியல்வாதிகளை விடத் தாழ்ந்தவர்கள் என்று நினைக்கலாம் அல்லது தமிழர்களாகிய நாம் தீண்டத்தகாதவர்கள் என்று நினைக்கலாம்.
கடந்த 36 ஆண்டுகளாக 13வது திருத்தம் தமிழர்களுக்கு என்ன செய்தது என்பதை நாம் அறிவோம்.
1987ல் 13வது திருத்தம் வந்ததில் இருந்து பல வீரத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 1,46,000 அப்பாவித் தமிழர்கள் ஈவு இரக்கமின்றி கொல்லப்பட்டனர்.
50,000 தமிழ் குழந்தைகள் அனாதைகளானார்கள். 90,000 தமிழர்கள் விதவைகள் ஆனார்கள். 35,000க்கும் மேற்பட்ட தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர்.
பல தமிழ் சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டனர். பின்னர் கொலை செய்யப்பட்டனர்.
இந்த 13வது திருத்தம் பற்றிய பேச்சு இன்னும் தமிழர்களுக்கு சேதம் விளைவித்து வருகிறது. தமிழர்களின் கோவில்கள் சிங்கள பௌத்த சின்னங்களாக மாற்றப்பட்டுள்ளன.
13வது திருத்தம் கேரள அரசியல்வாதிகளான நாராயணன் மற்றும் சிவசங்கர் மேனன் ஆகியோரால் பரிந்துரைக்கப்பட்டது. சேர ஆட்சியாளர்களை சோழர்கள் தோற்கடித்ததால் கேரள அரசியல்வாதிகள் தமிழகத்தில் தமிழர்கள் மீது இன்னும் கோபத்தில் உள்ளனர்.
உலகில் பெரும்பான்மை அடக்கு முறையாளர்களின் கீழ் நில அதிகாரம் மற்றும் பொலிஸ் அதிகாரம் கொண்ட நாடு இல்லை.
இந்த 13வது திருத்தம் ஒரு தனித்துவமான கருத்தாகும். இது தமிழர்களை முட்டாளாக்கவே உருவாக்கப்பட்டது.
இந்த ஒற்றையாட்சி நாட்டில் சுதந்திரம் பெற்று கடந்த 75 வருடங்களாக தமிழர்களுக்கு என்ன நடந்தது என்பதை நாம் அறிவோம்.
வெறுமனே, ஒற்றையாட்சி அரசின் கீழ் எந்த அரசியல் தீர்வும் இயங்காது. குறிப்பாக சிங்களவர்கள் பெரும்பான்மையாக இருக்கும் போது எந்த அரசியல்வாதியும் இதை இன்னும் புரிந்துகொள்ளவில்லை என்றால், அவர்கள் இனி மேலும் புரிந்து கொள்ள மாட்டார்கள்.
சிங்களவர்கள் இந்த முழுத் தீவிழும் பௌத்த மயமாக்கலையும் சிங்கள மயமாக்கலையும் விரும்புகிறார்கள் என்பதை தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.
தொடர்ச்சியான ஆக்கிரமிப்பு மற்றும் அடக்கு முறை முழு உலகிற்கும் சிங்கள சிந்தனையை காட்டுகிறது. எனவே, தமிழர்களின் அரசியல், நிலம், பொருளாதாரம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் தமிழ் இறையாண்மையே சிறந்த தீர்வாகும்.
அதனால் தான் தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிக்க பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் தாய்மார்களாகிய நாங்கள் கோருகிறோம் என தெரிவித்துள்ளனர்.

## இலங்கையில் கண்டுபிடிக்கப்...

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் உருத்திரகுமாரன் கடிதங்களை வரைந்துள்ளார்.
கடிதமொன்றின் உள்ளீடுகள்:
அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனிதப்புதைகுழிக்கு விஜயம் செய்யுமாறும் அவ்விடத்தை கையகப்படுத்துமாறும் உலகளாவிய ரீதியிலுள்ள தமிழ் மக்கள், பாதிக்கப்பட்டவர்கள், மற்றும் அவர்களின் குடும்பங்கள் சார்பாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கமானது இக்கோரிக்கையை உடனடியாகக் கோருகிறது.
இலங்கை மீதான மனித உரிமைகள் சபையின் 2021ஆம் ஆண்டு தீர்மானத்தின் எட்டாம் பந்தி, சிறிலங்காவில் இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பொறுப்புக்கூறல் நடைமுறைக்காக, சாட்சியங்களை சேகரிக்க, உறுதிப்படுத்த, ஆராய, பாதுகாக்க மனித உரிமை ஆணையகத்திற்கு அதிகாரம் வழங்குகின்றது. எமது கோரிக்கை, ஆணையகத்திற்கு வழங்கப்பட்ட மேற்கூறிய அதிகாரத்திற்கு அமைகின்றது என நாம் நம்புகின்றோம்.
ஐக்கிய நாடுகளின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் செயற்குழு தமது அறிக்கையில் உலகத்தில் சிறிலங்காவில்தான் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமானது என்று குறிப்பிட்டதை கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.
சிறிலங்கா வலிந்து காணாமல் ஆக்கலை தமிழினவழிப்பின் ஒரு கருவியாக பயன்படுத்துகிறது. தமிழர் தாயகத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனிதப் புதைகுழி அமைந்திருப்பது ஆச்சரியப்படுவதற்கில்லை.
இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட 33ஆவதான இந்தப் பாரிய மனிதப்புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட இடமானது யுத்தத்தின்போது சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. இதேவேளை புதைகுழிக்கருகில் பாரிய இராணுவ முகாமொன்று காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது.
தங்களின் பிள்ளைகளின் நிலைகளை இதுவரையில் அறியாத வலிந்து காணமலாக்கப்பட்டோரின் ஆயிரக்கணக்கான தாய்மார்கள் உட்பட தமிழ் மக்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களே கண்டுபிடிக்கப்படுவதாக அஞ்சுகின்றனர்.
இதுதான் உண்மையெனில், உங்களுடைய அலுவலகத்தின் தலையீடில்லாமல் உண்மை எப்போதும் வெளிவராதென மேலதிகமான அச்சம் காணப்படுகிறது. உங்களது அலுவலகத்தின் தொழில் நிபுணத்துவமும், மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதுவும் இந்த விடயத்தில் உடனடியாகத் தேவை.
பாரிய மனிதப் புதைகுழிகளுக்கு பேர்போனதாக சிறிலங்கா காணப்படுகின்றது. கடந்த 30 ஆண்டுகளில் 32 பாரிய மனிதப் புதைகுழிகள் (புதிய கண்டுபிடிப்பு 33ஆவதாகும்) இலங்கைத் தீவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
21 சிறுவர்களினது உள்ளடங்கலாக சித்திரவதை அடையாளங்களுடன் 276 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டதாக ஐக்கிய இராச்சியப் பத்திரிகையான த இன்டிபென்டென்ட் (The Independent) கடந்த 2018ஆம் ஆண்டில் செய்தி வெளியிட்டிருந்தது.
1998ஆம் ஆண்டில், யாழ்ப்பாணக் குடாநாட்டை தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து 1995,1996ஆம் ஆண்டில் இலங்கை இராணுவம் கைப்பற்றிய பின்னர் பிராந்தியத்தில் காணாமல் போன நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு செம்மணிக் கிராமத்துக்கு அருகிலுள்ள பாரிய மனிதப் புதைகுழிகளில் புதைக்கப்பட்டதாக இலங்கைப் படைவீரரொருவர் வாக்குமூலம் வழங்கியிருந்தார். 300 தொடக்கம் 400 பேர் வரையில் இறந்திருக்கலாமென அறிக்கைகள் தெரிவிக்கின்றன.
இதேவேளை, ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள், காணாமல்போனவர்களின் குடும்பங்கள், மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான நிலையம், சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்தால் இலங்கையில் பாரிய மனிதப் புதைகுழிகளும் தோல்வியடைந்த அகழ்வுகளும் (Mass Graves and Failed Exhumations in Sri Lanka) என்று தலைப்பிடப்பட்ட 75 பக்கங்களைக் கொண்ட, கடந்த மாதம் 20ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கையானது பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது.
எந்தவொரு இலங்கை விசாரணை ஆணைக்குழுவும் பாரிய மனிதப் புதைகுழிகளை நோக்குகின்ற அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை. உண்மையைக் கண்டறியும் நடவடிக்கைகள் தடுக்கப்படுகிறது. திடீரென நீதவான்கள், தடயவியல் நிபுணர்கள் இடமாற்றப்படுகின்றனர்.
சட்ட ஆணைகளை நிறைவேற்றுவதை பொலிஸ் தாமதப்படுத்துகிறது. சம்பவ இடங்களுக்கு குடும்பங்களின் வழக்கறிஞர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. உயிருடனுள்ள சாட்சிகளைக் கண்டுபிடிப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.
இறப்பின் முன்னான எவ்வித தகவல்களும் சேகரிக்கப்படவில்லை. அரிதாக சிலர் குற்றவாளியாக்கப்பட்டால், அவர்கள் பின்னர் பொதுமன்னிப்பளிக்கப்படுகின்றனர்.
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு இது தீர்க்கமுடியாத துயரமாக உள்ளது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உண்மையை அறியாமலே இறக்கிறார்கள்.
பாரிய மனிதப் புதைகுழிகள் தொடர்பான பொலிஸ் விசாரணைகளை இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தடுத்ததாகவும் இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபைக்கு ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவால் 2014ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட "இலங்கை: பாரிய மனிதப் புதைகுழிகளின் புறக்கணிப்பு" அறிக்கையில் உங்களது கவனத்தைச் செலுத்த வைக்க விரும்புகின்றேன்.
குறிப்பாக இந்த அறிக்கை: பாரிய மனிதப் புதைகுழிகளை ஐக்கிய் நாடுகளின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான ஆணையாளர் நேரடியாக கண்காணிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.
நீதித்துறை உள்ளடங்கலாக சிறிலங்காவின் அரச கட்டுமானங்களில் பரவலான, வேரூன்றிய இனவாதம் காரணமாக தமிழ் மக்கள் ஒருபோதும் நீதியை உள்ளூர்ப் பொறிமுறை மூலம் பெற்றுக் கொள்ள மாட்டார்கள். அந்தவகையில், உடனடியான அகழ்வுக்கான சர்வதேசப் பொறிமுறை ஒன்று, சாட்சியங்களைப் பாதுகாக்கவும், நீதியையும், பொறுப்புக்கூறலையும் நடைமுறைப் படுத்துவதற்கு அவசியம் என கடிதம் முடிவடைகின்றது.

## வங்குரோத்து நிலைக்கு ...

பல்லாயிரக்கணக்கான உத்தியோகத்தர்கள் தேவை. குடிசன மதிப்பீடு என்று செய்யும் பொழுது வெறுமனே, குடும்பங்களின் எண்ணிக்கை மாத்திரமன்றி, பல்வேறுபட்ட விடயங்களையும் உள்ளடக்கியதாகவே அது அமையும்.

எதிர்காலத்தின் திட்டமிடல்கள், அபிவிருத்தி போன்றன இதன் இந்த குடிசன மதிப்பீட்டின் அடிப்படையிலே மேற்கொள்ளப்படும்.

உள்நாட்டு கடன் மற்றும் வெளிநாட்டு கடனினை செலுத்த முடியாது கால அவகாசம் கேடடுள்ள நாட்டில், குடிசன மதிப்பீட்டை செய்வதற்கான பெருந்தொகை பணம் அரசாகத்திடம் உள்ளதா? என்ற கேள்வி எழுகின்றது.

இந்த வருட ஆரம்பத்தில் உள்ளூராட்சி தேர்தலை நடத்த வேண்டியிருந்த சூழலில், பல கட்சிகளும், சுயேட்சை குழுக்களும் பல கோடி ரூபாயினை டிப்போர்ஸிராக கொடுத்து அதனை நடத்துமாறு கேட்டிருந்தது. ஆயினும் நாடு பொருளாதார ரீதியாக வங்குரோத்து நிலையில் உள்ளதாக கூறி இந்த தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது பாராளுமன்றத்தில் பழைய உள்ளூராட்சிமன்றங்களை மீண்டும், இயங்க வைப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறான, காரணிகளை கூறும் அரசாங்கம் பெருமளவான தொகையை செலவு செய்து குடிசன மதிப்பீட்டை செய்ய கூடிய நிலையில் இருக்கின்றதா? அத்துடன் இந்த தேர்தலை ஒத்திவைக்கும் ஜனாதிபதி, வரும் வருடம் முதலாவதாக ஜனாதிபதி தேர்தலை வைப்பதற்கு அவர் விரும்புகின்றார்.

ஜனாதிபதியை பொறுத்த மட்டில் அவர் மீளவும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக வர வேண்டும். ஆனால், அவர் வருவதும், விடுவதும் மக்களின் முடிவு.

நாட்டில் நடக்க வேண்டிய தேர்தலை கால வரையறையின்றி ஒத்தி வைப்பதும், அதனை நடத்த முடியாதென ஜனநாயகத்தை குழி தோண்டி புதைப்பது என்பதான செயற்பாடு ஏற்றுக்கொள்ள மாட்டாது.

# இந்திய மீனவர் விவகாரத்தில் உரிய முடிவுகள் எட்டப்படுத்தல் வேண்டும் : கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன்..!



இந்திய மற்றும் இலங்கை அரச தரப்பிற்கும் தொழிலாளர் தரப்புக்களிற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்று இருப்பினும் இதுவரை ஆக்கபூர்வமான முடிவுகள் ஏதும் எட்டப்படாது இருப்பதானது வேதனைக்குரிய விடயம் என ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் மற்றும் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இதனை தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் தொடர்ந்து மீன்பிடிப்பதானது இலங்கைத் தொழிலாளர்களுக்கு பாரிய இழப்பை ஏற்படுத்தும்.

இந்திய மற்றும் இலங்கை அரச தரப்புக்களுகிடையும் தொழிலாளர் தரப்புக்களுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றிருப்பினும் இதுவரை ஆக்கபூர்வமான முடிவுகளேதும் எட்டப்படவில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

ஏற்கனவே பல வருடங்களுக்கு முன்னர் டெல்லியில் நாங்கள் பேசியிருக்கின்றோம். பாக்குநீரிணை மற்றும் மன்னார் வளைகுடா போன்ற இந்தியக் கடற்பரப்புக்கள் மீன் வளங்கள் அற்றுப்போகக்கூடிய சூழ்நிலையில் தான் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பினுள் வருகின்றார்கள் என்பது தான் யதார்த்தம்.

இந்தியா மீனவர்கள் மடி வலைகளைப் பயன்படுத்தி. கடலின் அடிமட்டத்திலுள்ள அனைத்தையும் வாரி அள்ளிக்கொண்டு செல்கின்றார்கள் என்பது பாரிய குற்றச்சாட்டாகவுள்ளது.

அது மட்டுமல்ல எமது தொழிலாளர்களின் வலைகளையும் அறுத்துக்கொண்டு செல்கின்றார்கள்.

டெல்லிக்கு ஜனாதிபதி செல்லும் போது கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அவருடன் செல்வதாக நாங்கள் அறிகின்றோம். குறித்த மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேசாது விடின் அவரது குறைபாடாகவே கருதுகின்றோம்.

# சாந்தன் இலங்கை திரும்ப அனுமதியுங்கள்!

## ரணிலுக்குத் தாயார் கடிதம்



சாந்தன் இலங்கை வருவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கோரி அவரின் தாயார் தில்லையம்பலம் மகேஸ்வரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

இந்தக் கடிதத்தை அவர் வடக்கு மாகாண ஆளுநர் பணிமனை ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அத்துடன், வெளிவிவகார அமைச்சிடமும் இதே கோரிக்கையை அவர் முன்வைத்துள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற சாந்தன் உள்ளிட்டவர்களை அந்த நாட்டின் உயர்நீதிமன்றம் கடந்த ஆண்டு நவம்பரில் விடுதலை செய்தது. இதில், இலங்கையர்களான சாந்தன், முருகன், றொபேர்ட்ஸ், ஜெயக்குமார் ஆகிய நால்வர் திருச்சி சிறப்பு முகாமில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையிலேயே, தனது மகன் தாய்நாடு திரும்புவதற்கு வழிவகை செய்யுமாறும் - அவர் நாடு திரும்ப அனுமதிக்குமாறும் கோரி சாந்தனின் தாயார் ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சுக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

# சரத் வீரசேகரவின் கருத்தை ஹன்சார்ட்டிலிருந்து நீக்க நடவடிக்கை! சுமந்திரன் எம்.பி. தகவல்



முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்த கருத்தை ஹன்சார்ட்டிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "நீதிபதி தொடர்பில் தனிப்பட்ட விமர்சனம் முன்வைக்க முடியாது.

நாடாளுமன்றத்தில் நிலையியல் கட்டளைக்கு அமைவாக அடுத்த அமர்வில் வீரசேகர தெரிவித்த கருத்தை ஹன்சார்ட்டிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்."என கூறியுள்ளார்.

நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையிலும், நீதிபதியை அச்சுறுத்தும் விதமாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர வெளியிட்டுள்ள கருத்துக்களை வன்மையாக கண்டிப்பதாக தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்திருந்தனர்.


இதேவேளை குருந்தூர் மலை விவகாரத்தில் தமிழ் நீதிபதியொருவரின் தலையீட்டை வாய்ப்பாக பயன்படுத்தி, சிங்கள மக்கள் மத்தியில் இனவெறியை தூண்டிவிடுவதற்கே சரத் வீரசேகர முயற்சிக்கின்றார் எனவும் கூறியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை (07.07.2023) நாடாளுமன்றத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர ஆற்றிய உரையில், குருந்தூர் மலையில் இருந்து எம்மை வெளியேற்றிய முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியின் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது.

தொல்பொருள் தொடர்பில் ஆராயும் அதிகாரம் அவருக்கு இல்லை. இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதை நீதிபதி விளங்கிக்கொள்ள வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த தொல்பொருள் மரபுரிமைகளுக்கு எதிராக நீதிபதிகளும் செயற்படுகின்றார்கள். ஆகவே, பௌத்த மரபுரிமைகளை பாதுகாக்க சிங்கள மக்கள் ஒன்றிணைய வேண்டும் என குறிப்பிட்டிருந்தார்.

# தேசிய ரீதியில் பல்கலைக்கழக ஹொக்கி அணியில் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் மாணவி!



போட்டியில் பல்கலைக்கழக ஹொக்கி களனிப் பல்கலைக்கழக மாணவி பங்கேற்றுள்ளார் .

இந் நிகழ்வில் தேசிய ரீதியில் பல்கலைக்கழக ஹொக்கி அணியில் தெரிவுசெய்யப்பட்ட களனிப் பல்கலைக் கழக மாணவி எல். அபிராமிக்கு வாழ்த்துகள் குடி வந்த வண்ணம் உள்ளமை பாராட்டுக்குரியது.

# இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள இந்தியப் பிரதமருக்கான தமிழ் கட்சிகளின் கடிதம்!

சில தமிழ் கட்சிகள் இணைந்து கடிதம் ஒன்றை தயாரித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பும் நடவடிக்கை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக தெரியவருகிறது.

குறித்த கடிதத்தில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் பங்காளிகளான ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ,புளொட், தமிழ் தேசிய கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியனவும் விக்னேஸ்வரன் எம்.பி. தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியும் கையொப்பம் வைப்பார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

சமகால நிலைமைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் கடிதத்தில் (12) கையொப்பம் சேகரிக்கப்பட்டு இன்று அல்லது நாளை கொழும்பில் உள்ள இந்தியத் தூதரிடம் அது கையளிக்கப்படும் என்றார்.

மேலும் குறித்த கடிதத்தில் இந்திய இலங்கை ஒப்பந்தம் பிரகாரம் கொண்டு வரப்பட்ட 13ம் திருத்தம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்பதுடன் வடக்கு கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது என்றார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விரைவில் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் இந்திய அரசாங்கம் தமிழர் தரப்பு விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி சில தமிழ் கட்சிகள் இணைந்து குறித்த கடிதத்தை தயாரித்துள்ளன.

இலங்கைத் தமிழரசுக் கட்சி தனியாக இந்திய பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பவுள்ள நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்கனவே கடிதத்தை இந்திய துணைத்தூதர் ஊடாக இந்தியப் பிரதமருக்கு அனுப்பியுள்ளது.



தேசியம் THESIYAM

# கவனயீனமான விபத்துக்களை தடுக்க முறையான வேலைத்திட்டம் அவசியம் :

## அடிப்படை மனித உரிமை மீறல் அமைப்பின் கிழக்கு மாகாண பணிப்பாளர்.



மன்னம்பிட்டி பஸ் விபத்தில் இதுவரையான தகவல்களின் படி 11 பேர் மரணித்து, 40 பேரளவில் காயமடைந்துள்ளனர் என அறியக் கூடியதாக உள்ளது. இது போன்ற கோர விபத்துக்கள் இனி மேலும் இடம்பெறாமல் போக்குவரத்து அமைச்சும், மாகாண வீதிப் பயணிகள் அதிகார சபையும், பொலிஸ் திணைக்களமும் இதற்கான சில வேலை திட்டங்களை முறையாக செய்ய வேண்டுமென அடிப்படை மனித உரிமை மீறல் அமைப்பின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எம் ஏ நளீர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும், உண்மையில் இந்த துயர் நிறைந்த சம்பவம் என்னையும் மிக வேதனைக்குட்படுத்தி உள்ளது. மன்னம்பிட்டி பஸ் விபத்தில் மரணமடைந்தவர்களின் குடம்பங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் விபத்தில் படுகாயமடைந்தவர்கள் விரைவில் நலன்பெற பிரார்த்திப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இப்படியான கவனயீனமான விபத்துக்கள் சாதாரண மக்களின் உயிருடன் விளையாடுவதாக அமைந்துள்ளது. இந்த பொடுபோக்கான செயலுக்கு பொறுப்பேற்கவேண்டியது யார்? விபத்தில் உயிரிழந்த குடும்பங்களுக்கு பொடுபோக்கான செயலுக்கு துணைபோன அதிகாரிகள் கூறப்போகும் நியாயம் என்ன? குறித்த பேருந்து தொடர்பில் தொடர்ந்தும் விமர்சனம் இருந்த சூழ்நிலையில் அதனை கவனத்தில் கொள்ளாமல் விட்டது ஏன்? என கேள்வி எழுப்பியுள்ளார்.

# கவனயீனம் உயிர்களை காவுகொண்டுள்ளது : காலமான உறவுகளின் செய்தி மிகுந்த கவலையளிக்கிறது: ஹரீஸ் எம்.பி இரங்கல்.



பொடுபோக்குகள், கவனயீனம் காரணமாக அண்மைக்காலமாக வீதி விபத்துக்கள் அதிகரித்து கொண்டே போகின்றன. அதன் தொடர்ச்சியாக கதுறுவெலையிலிருந்து பயணித்த தனியார் பஸ், மன்னம்பிட்டி, கொட்டலிய பாலத்தில் விபத்துக்குள்ளாகி ஆற்றில் விழுந்ததனால் 10க்கும் அதிகமானவர்கள் மரணித்த விடயம் எல்லோருக்கும் கவலையை ஏற்படுத்தி உள்ளது என ஸ்ரீ.ல.மு.கா பிரதித்தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அறிக்கையொன்றினூடக தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும், குறித்த பகுதியில் தொடர்ந்தும் விபத்துக்கள் நடைபெறுவதை அறிந்தும் பொடுபோக்காக சாரதிகள் தொடர்ந்தும் வாகனங்களை கண்மூடித்தனமாக செலுத்துவதானது உயிர்களுடன் விளையாடுவதாகவே அமைந்து விடுகிறது. இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், குடும்பஸ்தர்கள், பெண்கள் என குறித்த விபத்தில் காலமான அத்தனை உயிர்களும் பெறுமதியானது. இவர்களின் இழப்பு அவர்களின் குடும்பத்தினது இழப்பு மட்டுமல்ல இந்த நாட்டின் இழப்பாக அமைந்துள்ளது.

ஆசனங்களுக்கு மேலதிகமான பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு, வேகக் கட்டுப்பாட்டை இழந்து வாகனங்களைச் செலுத்திச் செல்லும் சாரதிகள் அவர்களது வாகனத்தில் பயணிக்கும் ஒவ்வொரு உயிரும் பெறுமதியானது என்பதை அறிந்துகொண்டு வாகனத்தை செலுத்த வேண்டும். இப்படியான விபத்துக்களுக்கு வாகன உரிமையாளர்கள், சாரதிகள் மட்டுமின்றி பாராமுகமாக இருந்த அதிகாரிகளும் பொறுப்புக் கூற வேண்டும்.

இந்த விபத்தில் காலமான அத்தனை எனது உறவுகளுக்கும் எல்லாம் வல்ல இறைவன் நல்ல நிலையை வழங்க பிரார்த்திப்பதோடு, காயமடைந்தவர்கள் விரைவில் குணமாகி வீடு திரும்பவும் பிராக்கிறேன். விபத்தில் காலமானவர்களின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# 40 நாட்களுள் கனகர் கிராம காணிகள் மக்களுக்கு பகிரந்தளிக்கப்பட வேண்டும்!

## கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் களத்தில்..



33வருடங்களாக காடுமண்டி மக்களுக்கு மறுக்கப்பட்டு வந்த பொத்துவில் கனகர் கிராம மக்களது காணிகள் எதிர்வரும் 40 தினங்களுள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று (11) செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் கனகர் கிராமத்தில் வைத்து தெரிவித்தார்.

ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்த வேளை சர்ச்சைக்குரிய கனகர் கிராமத்திற்கும் விஜயம் செய்தார்.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் பெருமாள் பார்த்தீபன் மற்றும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் பொத்துவில் பிரதேச செயலாளர் உள்ளிட்ட பிரமுகர்கள்அங்கு சமுகமளித்திருந்தனர்.

கடந்த இரு மாதங்களாக இப் பிரதேசம் ஜேசிபி இயந்திரம் மூலம் துப்பரவாக்கப்பட்டு வருகிறது. பொத்துவில் பிரதேச சபை முன்னாள் உப தவிசாளரும் சமுக செயற்பாட்டாளருமான பெருமாள் பார்த்தீபன் அரச அனுமதியுடன் இப் பணியில் ஈடுபட்டு வந்தார்.

அங்கு உப தவிசாளரும் சமுக செயற்பாட்டாளருமான பெருமாள் பார்த்தீபன் கூறுகையில்..

இங்கு வாழ்ந்து வந்த மக்கள் 1985 க்கு பின்னர் யுத்தத்தில் இடம்பெயர்ந்தனர்.

வாழ்ந்த 226 பேரில் முதல் கட்டமாக 76 பேருக்கு காணியை விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. ஒருவருக்கு 1 ஏக்கர் 20 பேர்ச்சஸ் காணி வழங்கப்படும். பயிர்ச்செய்கைக்காக 1 ஏக்கர் காணியும் வீடு அமைக்க 20 பேர்ச்சஸ் காணியும் வழங்கப்படவிருக்கிறது. எம்மைப் பொறுத்தவரை அனைவருக்கும் இக் காணிகள் பகிரந்தளிக்கப்பட வேண்டும் என்றார்.

ஆளநர் செந்தில் தொண்டமான் அந்த இடத்திலேயே உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை எடுத்து இன்னும் நாற்பது நாட்களில் இக் காணிகள் பூரணமாக துப்பரவாக்கப்பட்டு உரிய சகல மக்களுக்கும் பகிர்ந்தளிக்க பட வேண்டும் என்று கட்டளை இட்டார்.

கூடியிருந்த மக்கள் சந்தோசத்தில் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

# திருகோணமலையில் பாடசாலை மாணவர்களுக்கு இணைந்த கரங்களினால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு !




திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கிண்ணியா விபுலானந்த வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 56 பாடசாலை மாணவர்களுக்கும் மற்றும் திருகோணமலை பாரதி தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 50 மாணவர்களுக்கும் இணைந்த கரங்கள் அமைப்பினால் கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பன பாடசாலையின் அதிபர்களான செ. சத்தியசீலன் மற்றும் திருமதி சுஜந்தினி யுவராஜா ஆகியோர் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் மிகவும் அதி கஷ்ட, தொழில் வாய்ப்பற்ற குடும்ப மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பினால் இந்த கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் வழங்கி வைக்கப்பட்டது.

இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான சி.காந்தன், மா. ஜெயநாதன், சிருஸ்காந் சதீஸ்குமார், ஆகியோர் கலந்து கொண்டு இரு பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைத்தனர். இந்நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியைகளான திருமதி. க. சத்தியசீலன், திருமதி. அ. பிரதீபா, க. சிறிதரன், அ. அலெக்சாண்டர், அ.ரவிக்குமார் மேலும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று சங்க செயலாளர் அ. சங்கீர்த்தன் மற்றும் பெற்றோர்கள், மாணவர்கள் என பலர் வருகை தந்திருந்தனர்.

இணைந்த கரங்கள் அமைப்பு கல்விற்கான சேவையை ஆரம்பித்து ஒரு வருட காலத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளிலிருந்து ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பன வழங்கி அவர்களின் கல்விச் செயற்பாட்டினை முன்னெடுக்க உதவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அதிகாரத்தை வைத்திருந்தும் ஒன்றும் செய்யாத ஹக்கீம் இப்போது நீலிக்கண்ணீர் வடிக்கிறார் : ஐக்கிய காங்கிரஸ்



கதுருவெல வாகன விபத்துக்கு துக்கம் தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மேற்படி பாலத்தை திருத்துவதில் அரசாங்கம் பொடுபோக்காய் இருந்துள்ளதாக குறை கூறியுள்ள நிலையில் கிழக்கு மக்களை இணைக்கும் இப்பாலத்தை மைத்திரியின் அமைச்சரவையில் ஹக்கீம் குந்திக் கொண்டிருக்கும் போது திருத்த முயற்சிக்காமல் இருந்து விட்டு இப்போது நீலிக்கண்ணீர் வடிக்கின்றார் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

இப்பாலம் என்பது இன்று நேற்று போட்ட பாலம் அல்ல. பல தசாப்தங்களாக இப்படித்தான் உள்ளது. பொலன்னறுவை மாவட்டத்தையும் மட்டக்களப்பு மாவட்டத்தையும் இணைக்கும் பாலங்கள் பிரித்தானியரின் ஆட்சியில் போடப்பட்டு அண்மை வரை அவை புகையிரதமும் வாகனங்களும் செல்லும் பாலங்களாகவே இருந்து வந்தன. இதன் காரணமாக வாகன பயணிகள் பல காத்திருப்புக்களை சந்தித்தனர்.

2005ம் ஆண்டு ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷவே இப்பாலங்களின் பிரதான, நீண்ட பாலங்களை தனி வீதிகளாக புனரமைத்து வாகனங்கள் மட்டும் செல்லும் பாலங்களாக மாற்றியமைத்தார். இதில் மன்னம்பிட்டி, ஒட்டமாவடி பாலங்களும் அடங்கும். மேற்படி விபத்து நடந்த சிறிய பாலம் அகலமாக்கப்படவில்லை. பொலன்னறுவையை சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால கூட இதை திருத்த அக்கறை கொள்ளவில்லை.

ஆனாலும் கிழக்கு மாகாண மக்களின் அதிகபட்ச ஓட்டுப்பெற்ற கட்சியின் தலைவராகவும் அந்த ஓட்டுக்கள் காரணமாகவும் மைத்திரியின் அமைச்சரவையில் பதவியை பெற்றிருந்த ரவூப் ஹக்கீமாவது இந்தப்பாலத்தை திருத்தும்படி மைத்திரிக்கு அழுத்தம் கொடுக்கவில்லை. நல்லாட்சியின் போது இப்பாலத்தில் மருதமுனையை சேர்ந்த ஒரு வைத்தியரின் வாகனம் விழுந்து அவரின் குடும்பம் மரணித்த நிலையிலும் மருதமுனை மக்களின் அதிக ஓட்டுக்களை பெற்ற முஸ்லிம் காங்கிரசின் தலைவர் இப்பாலத்தை திருத்த எந்தவொரு அழுத்தத்தையும் அரசுக்கு கொடுக்காமல் பாராளுமன்றத்திலும் அமைச்சரவையிலும் தூங்கிவிட்டு இப்போது திடீரென முழித்துக்கொண்டு அரசாங்கத்தை குறை கூறுகிறார்.

ஆகவே இந்த விபத்துக்கான முழு பொறுப்பையும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரியும் அவரது அமைச்சில் குந்திக்கொண்டிருந்த ரவூப் ஹக்கீமுமே பொறுப்பேற்க வேண்டும் என்பதை ஐக்கிய காங்கிரஸ் கட்சி தெளிவாக சொல்லிக்கொள்கிறது.

# உரிமை கோரி அனைத்திலங்கை டெங்கு தடுப்பு உதவியாளர் சங்க பிராந்திய கிளையினர் வீதிக்கு இறங்கினர் !









அனைத்திலங்கை டெங்கு தடுப்பு உதவியாளர் சங்கத்தின் கல்முனை பிராந்திய டெங்கு தடுப்பு உதவியாளர்கள் கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிவரும் தங்களை நிரந்தரமாக்க கோரி போராட்டம் ஒன்றை காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன்னால் நேற்று (11) காலை முதல் முன்னெடுத்து வருகின்றனர்.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன்னால் தற்காலிய நிழல்குடை அமைத்து சுலோகங்களை ஏந்தி சத்தியாகிரக முறையில் இடம்பெற்ற இந்த போராட்டத்தில் கருத்து தெரிவித்த அனைத்திலங்கை டெங்கு தடுப்பு உதவியாளர் சங்கத்தின் கல்முனை பிராந்திய தலைவர் கடந்த பல வருடங்களாக டெங்கு தடுப்பு உதவியாளர்களாக கடமையாற்றும் எங்களை அரசினால் நிரந்தரமாக நியமிக்க முடியாமல் இருக்கிறது. எங்களுக்கு நிரந்தர நியமனம் சுகாதார அமைச்சின் சுகாதார திணைக்களத்தின் கீழ் வழங்கப்பட வேண்டும். தினம் 730 ரூபாய் அளவில் கிடைக்கும் சம்பளம் இப்போதைய நாட்டின் நிலைக்கு போதாமல் இருக்கிறது.

ஜனாதிபதி, பிரதமர், சுகாதார அமைச்சர், சுகாதார அமைச்சின் பல்வேறு முக்கிய அதிகாரிகளுக்கு எங்களின் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டும் இதுவரை எங்களுக்கான தீர்வு கிட்டவில்லை. விரைவில் அரசாங்கம் எங்களுக்கான நிரந்தர தீர்வை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள டெங்கு தடுப்பு உதவியாளர்கள் தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என்றனர்.

# பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையை ஒழிப்பதற்கும் மாணவர்கள் முன்னுதாரணமாக செயற்படவேண்டும்:

## கிழக்கு மாகாண சுற்றுலாத்துறையின் தவிசாளர் பி.மதனவாசன் தெரிவிப்பு







பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையிலிருந்து முற்றாக விடுபடவும், அதனை ஒழிப்பதற்கும் மாணவர்களாகிய நீங்கள் முன்னுதாரணமாக நின்று செயற்படவேண்டுமென கிழக்கு மாகாண சுற்றுலாத்துறையின் தவிசாளர் பி.மதனவாசன் தெரிவித்தார்.

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, சாஹிரா கல்லூரி மற்றும் சிங்கள மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் முதல் பசுமை வகுப்பறை ஒழுங்கமைக்கப்பட்டு கையளித்து வைக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (10) இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை தவிசாளர் பி.மதனவாசன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு, குறித்த பாடசாலையில் ஒழுங்கமைக்கப்பட்ட பசுமை முன்மாதிரி வாகுப்புக்களைத் திறந்து மாணவர்களிடம் கையளித்து வைத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், பசுமை வகுப்பறை நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக வடிவமைக்கப்பட்ட கற்றல் சூழலாகும். இது சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பிளாஸ்டிக் பாவனையை கட்டுப்படுத்தல் மற்றும் பாதுகாப்பை ஊக்குவிக்கும் ஒரு இடமாகவும் இருக்கின்றது.

இதனூடாக சுற்றுச்சூழலை மதிக்கும் வகையில் எவ்வாறு வாழவேண்டும் மற்றும் கற்றுக்கொள்வது என்பது குறித்து மாணவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் வகுப்பறை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களாகிய நீங்கள் இவ்வாறு செயற்படுவதன் மூலம் திருகோணமலை நகர் மட்டுமல்ல எமது மாவட்டம், மாகாணம், நாடு ஒரு முன்னேற்றப் பாதையை நோக்கிப் பயணிக்கும் என கிழக்கு மாகாண சுற்றுலா துறையின் தவிசாளர் பி.மதனவாசன் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் ரீ.ரவி, லயோலா சுற்றுச்சூழல் மற்றும் நீதி மையத்தின் பணிப்பாளர் Rev.Dr. Thierry J.Robouam, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர், வன்னி ஹோப் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் எம்.ரி.முஹம்மட் பாரிஸ், Trinco Aid பணிப்பாளர் தயாளினி ஹரிஹரன் ஆகியோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இத்திட்டம் வன்னி ஹோப் அவுஸ்திரேலியா நிறுவனத்தின் நிதி பங்களிப்போடு Trinco Aid நிறுவனத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு செயற்படுத்தபட்டு வருவதுடன், பாடசாலைகளில் பசுமை வகுப்பறை அமைப்பது பற்றியும், பசுமை வளாகங்கள் அமைப்பது தொடர்பாகவும், பாடசாலை மாணவர்களைக் கொண்டு சிறந்த செயல்திட்டங்களை எதிர்வரும் காலங்களில் செயல்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## வங்குரோத்து நிலைக்கு ...

உள்ளூராட்சி தேர்தல் மட்டுமன்றி, மாகாண சபை தேர்தலும் 5 வருடமாக நடத்தப்பட வில்லை, தனக்கு தேவையான புதிய ஆளநர்கள் கொண்டுவரப்படுகின்றார்களே தவிர மாகாணசபை தேர்தலை கட்டம் கட்டமாக நடத் தவே அரசாங்கம் அஞ்சுகின்றது.

இவ்வாறாக ஜனநாயக விரோத செயற்பாடு களையே ரணில் அரசாங்கம் செய்கிறது. அந்த வகையில், இது வெறுமனே குடிசன மதிப்பீடு மட்டுமா? தான் வெல்வதற்கான சாத்தியபாட்டினை அறிவதற்கான முயற்சியா? அல்லது பல கோடி ரூபாய் செலவிடப்படவுள்ளதா? என்ற கேள்விகள் பல உள்ளன.

குடிசன மதிப்பீடு உலக நாடுகளில் நடப்பது இயல்பு. ஆனால் பொருளாதாரத்தில் தலையெடுக்க முடியாத இலங்கை போன்ற நாட்டிற்கு இது தேவையானதா? எனவும் கேள்வியெழுப்பியுள்ளார்.




ONE SHOP STOP FOR ALL YOUR FURNITURE & DECOR NEEDS
BIG SALE! BIG SAVINGS
மங்களா
Mangala
காட்சியறை
யாழின் தளபாட உற்பத்தியாளர்
Furniture | Furnishing | Contemporary Furniture | Ethnic Furniture | Office Furniture | Exquisite Dining Sets | Upholstered Sofas | Outdoor & Lawn Furniture | Leather Recliner | Sheesham Wood Furniture | Ottomans & Chaises | Bedroom Collections | Bunk Beds | Artifacts | Rugs & Carpets | Mattresses & Poufs | Modular Kitchen | Murals & Paintings & etc.
No. 536, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.
TEL : 021 222 8367 | +94 777 286 069


சசிகா லேணர்ஸ்
SASIKA LEARNERS
குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
மும்மொழியிலும் வாகனப் பயிற்சி
எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்புகள்
அனைத்து கிளைகளிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்
தவணைக் கட்டணம் மற்றும் விரும்பிய நேரத்திலான பயிற்சி
தலைமைக் காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
0777 226 247 / 077 614 0361 / 021 221 7678 / 021 221 7578
www.sasikalearners.com
கிளை நிறுவனங்கள்
வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472 / 070 3013 021
மல்லாகம்
கே.கே.எஸ் வீதி
021 224 3393 / 070 3013 014
சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664 / 070 3013 016
யாழ்ப்பாணம்
இல. 281 C, மணிக்கூண்டு கோபுர வீதி
021 222 8004 / 070 3015 004


காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன்
நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
மகாநதி ஜ்வெல்லறி
தங்கப்பவுண் நகை வியாபாரம்
MAKANATHY JEWELLERY
Manufacturers of Gold Jewels
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்
72A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
CALL NOW : 077 581 2025


STUDIO Vista
CAPTURING NATURE BEAUTY
PROFESSIONAL PHOTOGRAPHY
PHOTOGRAPHY STUDIO
BOOK NOW
+94 777 47 4498
EVENT | VIDEO | FASHION | WEDDING | CORPORATE | MATERNITY | COMMERCIAL | STUDIOS | FRAMES | ALBUM DESIGNING | ALBUM MAKING | VIDEO EDITING | MUG & ALL SUBLIMATION PRINTING...
K.K.S ROAD, THAVADY JUNCTION, KONDAVIL, JAFFNA.


அ. கிருபாகரன்
- அதிபர் -

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.



We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | |
|---|---|---|
| **சுன்னாகம்** 021 224 2022 | **நெல்லியடி** 021 226 0700 | **பருத்தித்துறை** 021 226 1100 |
| **ஆவரங்கால்** 021 222 6688 | **சித்தங்கேணி** 021 225 2500 | **சாவகச்சேரி** 021 227 0700 |
| **பூநகரி** 021 320 1818 | **முழங்காவில்** 021 300 6544 | **விஸ்வமடு** 021 320 1515 |
| **மன்னார்** 023 225 1656 | **கிளிநொச்சி** 021 228 5505 | **வவுனியா** 024 222 7777 |








இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.